# விண்ணப்பதாரி தனியுரிமை அறிவித்தல்

## முதல் பதிப்பு

1990-ஆம் ஆண்டின் 18 ம் இலக்க இலங்கை கொடுகடன் தகவல் பணியகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் (இதனகத்துப்பின்னர் "CRIB " எனக் குறிப்பிடப்படும்), ஒரு சுதந்திரமான சட்டப்பூர்வ அமைப்பாகும். மேலும் இது, இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை பெரும்பான்மையான பங்கு மூலதனத்தைக் கொண்டுள்ள ஒரு பொது-தனியார் கூட்டாண்மையாகும். மீதமுள்ள பங்குகள் CRIB ன் ஏனைய பங்குதார உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

உங்கள் தனியுரிமையைப் பாதுகாப்பதே எங்களின் தலையாய முன்னுரிமையாகும். இவ் விண்ணப்பதாரி தனியுரிமை அறிவித்தல், எவ்வகையான தனிப்பட்ட தரவுகள் சேகரிக்கப்படுகின்றன அவை ஏன், எவ்வாறு சேகரிக்கப்படுகின்றன, மேலும் அவை யார் யாருடன் பகிரப்படுகின்றன அல்லது யார் யாருக்கு தெரியப்படுத்தப்படுகின்றன என்பதனை விபரிக்கிறது. எங்களுடன் எந்தவொரு தனிப்பட்ட தரவையும் பகிர்வதற்கு முன்னர், இவ் விண்ணப்பதாரி **த**னியுரிமை அறிவித்தலை பரிபூரணமாக வாசித்து விளங்கிக்கொள்ளுமாறு தயவாக கேட்டுக்கொள்கிறோம்.

இவ்விண்ணப்பதாரி தனியுரிமை அறிவித்தலானது, 2022 ஆம் ஆண்டின் 09 ம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச்சட்டத்தின் (PDPA) தேவைப்பாடுகளை திருப்தி செய்யும் வகையில் திருத்தப்பட்டுள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

இந்த இணையத்தளத்தைப் பயன்படுத்துவது, இவ்விண்ணப்பதாரி தனியுரிமை அறிவித்தலின் விதிமுறைகளை நீங்கள் புரிந்துகொண்டு ஏற்றுக்கொண்டமையை குறிக்கிறது. இந்தத் தனியுரிமை அறிவித்தல், CRIB பணியகத்தின் இணையத்தளத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் உள்வாங்கப்பட்டு, அதன் ஒரு பகுதியாகவும் அமைந்துள்ளதுடன் இவ்விணையத்தளத்தின் மீதான உங்கள் பயன்பாட்டை ஆளுகை செய்கின்றன.

**1. தரவுக் கட்டுப்பாட்டாளர் என்பவர் யார்?**

ஒரு தரவுக் கட்டுப்பாட்டாளர் என்பவர், "சுயமாகவோ அல்லது பிறருடன் கூட்டாகவோ தனிப்பட்ட தரவுகளைச் செய்முறைப்படுத்தலுக்கான நோக்கங்களையும் வழிமுறைகளையும் தீர்மானிக்கும் ஏதேனும் ஒரு இயற்கை ஆள் அல்லது சட்ட ஆள் ஆவார்" என தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தில் (PDPA) வரையறை செய்யப்பட்டுள்ளது.

ஏற்புடையதான தரவுப் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின்படி, CRIB ( மேலே விபரிக்கப்பட்டவாறு) ஒரு தரவுக் கட்டுப்பாட்டாளராக தகுதி பெறுகின்றது.

இவ்விண்ணப்பதாரி தனியுரிமை அறிவித்தலில் காணப்படும் "எங்களை எவ்வாறு தொடர்புகொள்வது?" என்ற பிரிவின் கீழ் தரவுக் கட்டுப்பாட்டாளரின் தொடர்பு விபரங்கள் தரப்பட்டுள்ளன.

**2. என்னென்ன தனிப்பட்ட தரவுகள் சேகரிக்கப்படுகின்றன?**

உங்களைப் பற்றிய பல்வேறு வகையான தனிப்பட்ட தரவுகள் மற்றும் /அல்லது ரகசியத் தரவுகளை நாங்கள் சேகரித்துச் செய்முறைப்படுத்துவோம்:

- தனிப்பட்ட அடிப்படைத் தகவல்கள் (முழுப் பெயர், பால், பிறந்த திகதி, பிரஜாவுரிமை, முகவரி போன்றவை)
- தேசிய அடையாள அட்டை /கடவுச்சீட்டு /சாரதி அனுமதிப்பத்திர விவரங்கள்
- தொடர்பு விபரங்கள் (உ.ம்: கையடக்க தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி , வதிவிட முகவரி போன்றவை)
- கல்வி மற்றும் தொழில்முறை அனுபவம் மற்றும் இணைப்புகள்
- தொழில் விபரங்கள் (உ-ம், வேலைவாய்ப்பு, தொழில்வழங்குநர் விபரங்கள் போன்றவை)
- வியாபார செயற்பாடுகள் (உ-ம்: உயர் தொழில், வியாபாரம் குறித்த விபரங்கள் போன்றவை)
- நிதி விபரங்கள் (உ-ம் – கடனட்டை/ வரவு அட்டை, வங்கிக் கணக்கு விபரங்கள் போன்றவை)
- ஆளடையாளம் பரிசோதித்தல் மற்றும் பின்புல ஆய்வு
- புகைப்பட மற்றும் காணொளித் தகவல்கள் (புகைப்படங்கள், கண்காணிப்பு கமரா போன்றவை)
- வேறு தகவல்கள் (உ-ம் :குடும்பம், வாழ்க்கை முறை, சமூக சூழ்நிலைகள்)

- ஏதேனும் குற்றவியல் தீர்ப்பு
- மரபுவழி தரவு அல்லது உயிரியற்செய்திகளின் ஆயளவைமுறைத்தரவு (பயோ மெற்றிக் டேடா)

### 3. தனிப்பட்ட தரவுகளைச் செய்முறைப்படுத்துவதற்கான நோக்கங்கள் மற்றும் சட்டப்பூர்வ அடிப்படை என்ன?

PDPA-வில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டப்பூர்வ அடிப்படையின்படி மட்டுமே உங்கள் தனிப்பட்ட தரவுகளை நாங்கள் செய்முறைப்படுத்துவோம்;

- எம்மிடம் தொழில் ஒன்றைப் பெறுவதற்கான உங்களது விண்ணப்பத்தை செய்முறைப்படுத்துதல் (உ-ம் : தனிப்பட்ட கோப்பினை தயார்படுத்தல், உங்களை மதிப்பீடு செய்தல் போன்றவை)

- ஆள் சேர்ப்பு செய்முறையை மதிப்பீடு செய்தல் மற்றும் மேம்படுத்தல்
- எதிர்கால தொழில் வாய்ப்புக்களை வழங்குதல்.(உங்கள் விண்ணப்பம் வெற்றியளிக்காதவிடத்து)

- வேறு சட்ட ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகுதல் ( உ-ம், CRIB சட்டம், வரிகள், கணக்கீடு போன்றவை)

- மோசடிகளை தடுத்தல் மற்றும் கண்டறிதல்
- தரவுக் கட்டுப்பாட்டாளரின் பிற சட்டப்பூர்வ தேவைகள்
- நீங்கள் விசேடமாக ஒப்புக்கொண்டுள்ள வேறு ஏதேனும் செய்முறைப்படுத்தல்கள்

மேலே சுட்டிக்காட்டப்பட்ட நோக்கங்களுக்காக, உங்களைப் பற்றிய தனிப்பட்ட தரவுகளை, அவை பெறப்பட்டவாறே நாங்கள் செய்முறைப்படுத்துவோம்;

- நேரடியாக உங்களிடமிருந்து.

சுயவிபரப்படுத்தல் உட்பட, தன்னியக்கமாக்கப்பட்ட தனிநபர் தீர்மானிக்கும் செயல்முறைகளை நாம் மேற்கொள்ளும்போது, இவ்விண்ணப்பதாரி தனியுரிமை அறிவித்தல், அத்தகைய முடிவுகளை எடுப்பதில் பயன்படுத்தப்படும் அடிப்படைத் தர்க்கத்தையும், அந்தச் செய்முறைப்படுத்தலின் முக்கியத்துவத்தையும், ஏற்படக்கூடிய பின்விளைவுகளையும் வெளிப்படுத்தும் வகையில் புதுப்பிக்கப்படும்.

### 4. உங்கள் தனிப்பட்ட தரவுகளை யார் அணுகுவர்?

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கு அமைவாக உங்கள் தனிப்பட்ட தரவுகள் கையாளப்படுவதை நாங்கள் உத்தரவாதம் செய்வோம்.

குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக உங்கள் தனிப்பட்ட தரவுகள் பின்வரும் தரப்பினர்களுக்கு தெரிவிக்கப்படலாம்.

- மனித வள திணைக்கள உறுப்பினர்கள்
- நேர்முகப்பரீட்சை நடத்தும் தரப்பினர்
- சிரேஷ்ட அதிகாரிகள்
- ஆட்சேர்ப்புக்கு அனுமதி வழங்கும் அதிகார சபைகள்
- மூன்றாம் தரப்பு மனித வள சேவை வழங்குநர்கள் ( பின்புல ஆய்வு)

குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக, பொருத்தமான தொழிநுட்ப மற்றும் நிறுவன ரீதியான நடவடிக்கைகள் இருப்பதை உறுதிசெய்யும் தரவுச் செய்முறைப்படுத்துநர்களாகச் செயல்படும் பின்வரும் தரப்பினருடனும் நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவுகளைப் பகிரலாம்;

- தொழிநுட்ப ஆலோசகர்கள்( உ-ம். ஆளடையாள பரிசோதனை, பின்புல ஆய்வு செய்யும் நிறுவனங்கள், தபால் சேவைகள் போன்றவை)
- வழக்கறிஞர்கள் / சட்ட நிறுவனங்கள்
- சேவை வழங்கும் நிறுவனங்கள் (உ-ம்: தகவல் தொழிநுட்பம், ஆவண முகாமை, கணணி அமைப்பு வழங்குநர்கள் போன்றவை)

இறுதியாக, பின்வரும் சந்தர்ப்பங்களிலும் உங்கள் தனிப்பட்ட தரவுகளை நாங்கள் பகிரலாம்.

- சட்ட அமுலாக்க அலுவலர்கள், அரசாங்க முகவர் நிறுவனங்கள் மற்றும் ஒழுங்குமுறை அதிகாரசபைகளுக்கு தகவல்களை வெளிப்படுத்துவதன் மூலம், பொருத்தமான சட்ட அல்லது ஒழுங்குமுறைத் தேவைகளுடன் இணங்கி ஒழுகுவதற்காக.
- எங்கள் வியாபாரம், சொத்துக்கள் அல்லது பங்குகள் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியையும் முன்மொழியப்பட்ட அல்லது உண்மையான மறுசீரமைப்பு, இணைப்பு, கையகப்படுத்தல், கூட்டு முயற்சி, ஒப்படைப்பு, பரிமாற்றம் அல்லது பிற வழிகளில் அகற்றுதலுடன் தொடர்புபட்டதாக (நொடிப்பு நிலை அல்லது அதுபோன்ற சந்தர்ப்பங்களின்போது).

உங்கள் தனிப்பட்ட தரவுகளைச் செய்முறைப்படுத்தும் அங்கீகாரம் இல்லாத எந்தவொரு தரப்பினருக்கும் நாங்கள் அவற்றை வெளிப்படுத்த மாட்டோம்.

**5. எனது தனிப்பட்ட தரவுகள் எங்கு செய்முறைப்படுத்தப்படும்?**

உங்கள் தனிப்பட்ட தரவுகள், மேலே குறிப்பிடப்பட்டுள்ள தரப்பினரால், தேவைக்கேற்ப உள்ளூரிலும் மற்றும் வெளிநாட்டிலும் செய்முறைப்படுத்தப்படலாம் . ஏற்புடையதான தரவுப் பாதுகாப்புச்

சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க, இரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக நாங்கள் ஒப்பந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செய்முறைப்படுத்துவோம். அத்தகைய தகவல்களைச் செய்முறைப்படுத்துவதற்கான முறையான அங்கீகாரம் இல்லாத எந்தவொரு தரப்பினருக்கும் உங்கள் தனிப்பட்ட தரவுகள் வெளியிடப்படமாட்டாது.

எல்லை தாண்டிய தரவுப் பரிமாற்றத்தின் போது, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தில் ( PDPA ) ல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் பின்பற்றப்படுவதை நாங்கள் உறுதி செய்வோம்.

## 6. உங்கள் தனிப்பட்ட தரவுகள் தொடர்பாக உங்களுக்கான உரிமைகள் யாவை?

ஏற்புடையதான சட்டம் அல்லது ஒழுங்குவிதிகளினால் அனுமதிக்கப்படுமிடத்து உங்களுக்குப் பின்வரும் உரிமைகள் காணப்படுகின்றன:

- உங்களைப் பற்றி பேணப்படும் தனிப்பட்ட தரவுகளை அணுகுதல் (தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 13).
- உங்கள் சம்மதத்துடன் உங்கள் தனிப்பட்ட தரவுகள் செயல்முறைப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில், எந்த நேரத்திலும் உங்கள் சம்மதத்தை மீளப் பெற்றுக்கொள்ளுதல் (தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 14).
- PDPA-வின் (பிரிவு 14) அட்டவணை I-இன் விடயம் (உ) அல்லது (ஊ) பிரிவில் அல்லது அட்டவணை II-இன் விடயம் (ஊ) பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் உங்கள் தனிப்பட்ட தரவுகளை மேலும் செய்முறைப்படுத்துவதைத் தவிர்க்கும்படி தரவுக் கட்டுப்பாட்டாளரைக் கோருதல்.
- துல்லியத்தன்மையை உறுதிசெய்ய உங்கள் தனிப்பட்ட தரவுகளைத் நிவர்த்தி செய்தல் அல்லது பூரணப்படுத்துதல்.
- மேலே கூறப்பட்ட நோக்கங்களுக்காக உங்கள் தனிப்பட்ட தரவுகள் இனி தேவைப்படாதெனில், அவற்றை எங்கள் பதிவுகளிலிருந்து நீக்கிவிடுதல் (தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 16).
- தன்னியக்கமாக்கப்பட்ட செய்முறைப்படுத்தலை மட்டும் அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு முடிவையும் மறுபரிசீலனை செய்யக் கோருதல் (தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு18).
- எங்களிடமோ மற்றும்/அல்லது சம்பந்தப்பட்ட தரவுப் பாதுகாப்பு அதிகாரசபைக்கு முறைப்பாடு செய்தல்( (PDPA-வின் அட்டவணை 5-இன் பிரிவு (ஔ)).

மேற்கண்ட உரிமைகளைப் பயன்படுத்துவதற்கு, எமது இணையத் தளத்தில் இருந்து "**தரவு தாரி உரிமைகள் கோரிக்கைப்படிவம்"- வருங்கால ஊழியர்கள், தனிப்பட்ட விற்பனையாளர்கள்** என்பதனை தரவிறக்கம் செய்யவும். (Downloads / Credit Information Bureau of Sri Lanka)

## 7. உங்கள் தனிப்பட்ட தரவுகள் செய்முறைப்படுத்தப்படுவதை நீங்கள் எவ்வாறு மறுதலிக்கலாம்?

ஏற்புடையதான சட்டம் அல்லது ஒழுங்கு விதிகளுக்குட்பட்டு, உங்கள் தனிப்பட்ட தரவுகள் செய்முறைப்படுத்தப்படுவதை மறுதலிப்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. அத்தகைய கோரிக்கை கிடைக்கப் பெற்றவுடன், தொடர்புடைய சட்டக் கட்டமைப்பின் கீழ் வேறுவிதமாக அனுமதிக்கப்பட்டாலன்றி, நாங்கள் உங்கள் தனிப்பட்ட தரவுகள் செய்முறைப்படுத்தப்படுவதை நிறுத்தி விடுவோம். மேலே விவரிக்கப்பட்டுள்ள உங்கள் ஏனைய உரிமைகளைப் போலவே இந்த உரிமையையும் நீங்கள் பயன்படுத்தலாம்.

## 8. உங்கள் தனிப்பட்ட தரவுகளை நாங்கள் எவ்வளவு காலம் பேணலாம்?

உங்கள் தனிப்பட்ட தரவுகளை, அவை சேகரிக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அல்லது சட்டப்பூர்வ கடமைகளுடன் இணங்கி ஒழுகுவதற்கு தேவையான காலத்திற்கு மட்டுமே நாங்கள் பேணுவோம். உங்கள் தனிப்பட்ட தரவுகள், தேவைப்படும் காலத்திற்குப் பிறகு பாதுகாக்கப்படமாட்டாது, மேலும் அவை முதலில் பெறப்பட்ட நோக்கங்களுக்காக மட்டுமே பிரத்தியேகமாகப் பராமரிக்கப்படும்.

உங்களது தொழில் விண்ணப்பம் வெற்றியளித்தால், உங்களது தனிப்பட்ட தகவல்கள் சகல ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள ஊழியர் தனியுரிமை அறிவித்தல் பிரகாரம் செய்முறைப்படுத்தப்படும்.

## 9. உங்கள் தனிப்பட்ட தரவுகளை வழங்காவிடின் பின் விளைவுகள் என்ன?

- உங்கள் விண்ணப்பத்தைச் செய்முறைப்படுத்தப்படுவதில் எமக்கு தடையை ஏற்படுத்தலாம்.
- உங்கள் கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் எங்கள் ஆற்றலை பாதிக்கலாம்.

- எங்கள் இணையத்தளம், இணைப்புகள் அல்லது டிஜிட்டல் தளங்களில் உள்ள சில அம்சங்களுக்கான அணுகலைக் கட்டுப்படுத்தலாம் அல்லது தடுக்கலாம்.
- தொழில் வெற்றிடம், சேவை வழங்கல்கள் குறித்த புதுப்பிக்கப்பட்ட செய்திகளை

  உங்களுக்கு வழங்குவதில் தடையாக அமையலாம்.
- இதன் விளைவாக, நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புகள் அல்லது தொடர்பாடல்களிலிருந்து நீங்கள் தவிர்க்கப்படலாம்.
- உங்களுடன் வினைத்திறனான தொடர்புகளை பேணும் எமது ஆற்றலுக்கு பங்கம் ஏற்படுத்தலாம்.
- அத்தகைய தனிப்பட்ட தரவுகளைச் சேகரிப்பதை அவசியமாக்கும் ஏற்புடையதான சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகளுடன் இணங்கி ஒழுகாமையாக அமையலாம்.

## 10. எங்களைத் தொடர்புகொள்வது எப்படி?

கீழ் வரும் ஏதேனும் வழிகளில் ல் எம்மை நீங்கள் தொடர்பு கொள்ளலாம்

- தபால் மூலம் :

  தரவு பாதுகாப்பு அலுவலர்
  தரவு பாதுகாப்பு திணைக்களம்
  இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்
  இல:201, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத
  கொழும்பு -02, இலங்கை

- தொலைபேசி மூலம்
  0112 13 13 38
- மின்னஞ்சல் மூலம்:

  privacy@crib.lk

## 11. இவ்விண்ணப்பதாரி தனியுரிமை அறிவித்தலை நாம் எக்கால இடைவெளியில் புதுப்பிக்கிறோம்?

இந்தத் தனியுரிமை அறிவித்தல் காலத்துக்குக்காலம் மதிப்பாய்வு செய்யப்படுகிறது. இருப்பினும், CRIB தனது சுய விருப்பின்பேரில், எந்த நேரத்திலும் முன்னறிவிப்பின்றி இவ்விண்ணப்பதாரி தனியுரிமை அறிவித்தலை திருத்துவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. இந்தத் தனியுரிமை அறிவித்தலின் கீழே உள்ள "இறுதியாகப் புதுப்பிக்கப்பட்டது" என்ற தலைப்பு, இந்த அறிவித்தல் இறுதியாக திருத்தம் செய்யப்பட்ட திகதியை குறிக்கிறது. இந்தத் தனியுரிமை அறிவித்தலில் மேற்கொள்ளப்படும் எதுவித திருத்தங்களும், திருத்தப்பட்ட உள்ளடக்கம்

இவ்விணையத்தளத்தில் வெளியிடப்பட்டவுடன் நடைமுறைக்கு வரும். இத்திருத்தங்களுக்குப் பிறகு நீங்கள் இணையத்தளத்தைப் பயன்படுத்துவது, அவ்வாறு திருத்தப்பட்ட இவ்விண்ணப்பதாரி தனியுரிமை அறிவித்தலை நீங்கள் ஏற்றுக்கொண்டுள்ளமையை பிரதிபலிகின்றது. இந்தத் தனியுரிமை அறிவித்தலில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் பற்றித் தெரிந்துகொள்ள, இவ்விணையத்தளத்தைப் பயன்படுத்தும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இவ்விண்ணப்பதாரி தனியுரிமை அறிவித்தலை கண்ணுறுமாறு உங்களை ஊக்குவிக்கிறோம்.

இறுதியாக புதுப்பிக்கப்பட்ட திகதி ; 15 ஜூன் 2026